[1978 ஆகஸ்ட் 31]

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வின 13.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்திடும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாயவரம் நகராட்சி புதை சாக்கடை திட்டத்தின் ஆய்வு களப்பணிகள் முடிவடைந்து, திட்ட உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அதோடு, பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மதிப்பீட்டுத் தொகை ரூ. 235.57 இலட்சம். அரசின் ஆய்வு முடிந்த பிறகு வேலை தொடங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த மதிப்பீட்டுத் தொகையில் மாயூரம் நகராட்சியிடம் பங்கு தொகை ஏதாவது கேட்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் மாயூரம் நகராட்சி என்ன பதில் கொடுத்துள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதுமாதிரியான திட்டங்களுக்கு எல். ஐ. சி. யிலிருந்து இரண்டு பங்கும் அரசிடமிருந்து ஒரு பங்கும் பணம் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தை 30 ஆண்டுக் காலத்தில் திருப்பித் தரவேண்டுமென்று சொல்லி, அதை அந்த நகராட்சி ஏற்றுக் கொண்ட பிறகு தான் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன; அரசும் அனுமதி தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

* வின 14—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்க திட்டம் வகுத்து இன்னும் முடிவடையாமல் உள்ளதா?

(ஆ) மணம்பூண்டி, தேவனூர், நாயனூர், வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அருநைபுரம், ஆதிச்சனூர், வைப்பூர் ஆகிய இடைப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கும் இதனை விஸ்தரிக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.
(ஆ) தற்சமயம் திட்டம் எதுவுமில்லை.

திரு. கோ. ரகோத்தமன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியத்தின் மூலம் பல இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்க திட்டம் தீட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் திட்டம் முடிவுருமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா? அது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, டிசம்பர் 1978-க்குள் இத் திட்டம் முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

திரு. கோ. ரகோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, வேட்டவலம் பேரூராட்சிக்குச் செல்லும் வழியில் மணம்பூண்டி. தேவனூர், நாயனூர், வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அருநைபுரம், ஆதிச்சனூர், வைப்பூர் ஆகிய இடைப்பட்ட பஞ்சாயத்துக்கள் இருப்பதால் அந்தப் பஞ்சாயத்துக்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, வேட்டவலம் குடிநீர் திட்டத்தில் மணம்பூண்டி, தேவனூர் நாயனூர், வீரப்பாண்டி, வைப்பூர் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்க வழிவகை செய்கின்ற வகையில் திட்டம் எதுவும் அமலில் இல்லை. ஒட்டம்பட்டு, அருநைபுரம், ஆதிச்சனூர் ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் அமைக்க வழிவகை எதுவும் செய்யப் படவில்லை.

மன்னன் வகுப்பினர்.

* வினு 15.—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 20—9—1976-ல் மத்திய அரசின் சட்டம், நீதித் துறை "மன்னன்" என்ற பிரிவினரை மலைசாதியினர் பட்டியலில் அறிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இந்த அறிவிப்பு மாநிலத்திற்கு வரும் கல்வி ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படுமா?